## சட்டமறுப்பு தொண்டர்களுக்கு ஓர் வேண்டுகோள்

மே 22— சட்ட மறுப்பு ஊர்வலத்தில் பங்குபெறவிருக்கும் தொண்டர்கள் அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்குமுன்னர் தமிழர் கூட்டணி தலைமைச்செயலகத்தில் (238, பிரதானவீதி, யாழ்ப்பாணம்) வந்து கூடவேண்டுமென தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அ.அமிர்தலிங்கம் அறிவிக்கிறார்.


# சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2006, வைகாசி 4, ஐ:அவ் 6 (18-5-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 42


# மே 22 - சட்டமறுப்பு ஊர்வலத்தில் 5000 தொண்டர்!

## என்ன செய்வதென்றறியாது திக்குமுக்காடுகிறது அரசு!

குடியரசு தினமான எதிர்வரும் மே 22ம் நாள் வியாழக்கிழமை தமிழ் ஈழத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் தமிழர் கூட்டணி நடத்தத் திட்டமிட்டுள்ள சட்டமறுப்பு ஊர்வலத்துக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டுவிட்டன. இந்த ஊர்வலத்தில் ஒவ்வொரு தமிழ்த் தொகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது 200 தொண்டர்கள் வீதம் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தொண்டர்கள் பங்குபற்றவிருக்கின்றனர். இவ்வூர்வலத்தில் தமிழ் மகளிர் பேரவையைச் சேர்ந்த 200 பெண்களும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இந்தச் சட்டவிரோத ஊர்வலத்தின் மீது என்ன நடவடிக்கையெடுப்பது? நடவடிக்கையெடுப்பதா அல்லது பேசாமல் விட்டுவிடுவதா என்பது குறித்து அரசாங்க உயர்தர அதிகாரிகள் இதுவரை எதுவித முடிவுக்கும் வர முடியாமல் திக்குமுக்காடி வருவதாக அறியப்படுகிறது.

மே 22ம் நாள் தமிழர் கூட்டணி நடத்தவிருக்கும் சட்டமறுப்பு ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகியவை பற்றி 11.5.75ல் யாழ்ப்பாணம் தமிழர் கூட்டணி தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. இக்கூட்டத்திற்கு மூதறிஞர் தந்தை செல்வா தலைமைதாங்கினார்.

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் 200 தொண்டர்களை இந்த ஊர்வலத்தில் சேர்த்துக்கொள்வதென்றும் இந்தத் தொண்டர்களைப் பொறுக்கியெடுக்கும் பொறுப்பை அந்தத்தொகுதி பா.உ.க்களிடம், கூட்டணி பிரமுகர்களிடமும் ஒப்படைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்டப் பிரதிநிதிகளுடன் வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு மன்னாரிலிருந்து திரு. வே. கைலாயபிள்ளை, திரு சௌந்தரநாயகம், கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி, தமிழர் கூட்டணி அமைப்புச்செயலாளர் திரு. காசி ஆனந்தன், கொழும்பிலிருந்து திரு. ஈழவேந்தன், கோவை மகேசன், ஆகியோரும் பங்கு பற்றினர்.

இந்தச் சட்டமறுப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சகல தமிழர் கூட்டணி பா. உ. க்களும் நிச்சயமாகக் கலந்துகொள்ள

—5-ம் பக்கம் பார்க்க

## "இலங்கைத் தமிழனின் சக்தியை சிறிமாவோ அம்மையார் போகப்போக உணர்வார்!"

"சிறிமா அம்மையார் உலகத்தில் பல பிரச்சினைகளை தீர்த்துவைத்திருப்பதாக கூறுகிறார்கள். பலரை அவர் வெற்றிகொண்டிருப்பதாக தம்பட்டம் அடிக்கிறார்கள். ஆனால் அந்த அளவு கெட்டித்தனம் உள்ள அவரால் இலங்கைத் தமிழனை வெற்றிகொள்ள முடியவில்லை. இலங்கைத் தமிழனிடம் அவர் படுதோல்வியே அடைந்திருக்கிறார். இலங்கைத் தமிழனின் சக்தி எப்படிப்பட்டது என்பதை இன்னும் காலம் போகப்போகத்தான் சிறிமா அம்மையார் படிக்கப் போகிறார்! —சித்தங்கேணி வரவேற்புக்கூட்டதில்

—மூதறிஞர் செல்வா.

## பாடசாலை பகிஷ்கரிப்பில் மாணவ மாணவியர் தீவிரம்!

### ஆட்சியை கிடுகிடுக்க வைக்கப்போகிறது மே 21- ஹர்த்தால்!

காங்கேசன்துறை இடைத்தேர்தலில் புதிய குடியரசு அரசியல் சட்டம் தமிழ் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டு — 'தனி நாடு' கோரிக்கைக்கு மக்களின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் முதன் முதலாக வரும் குடியரசு தின பகிஷ்கரிப்பும், ஹர்த்தாலும், தமிழ் ஈழ மடங்கும் முன்னெப்போதுமில்லாதவாறு மிகவும் மூர்த்தண்யமாகவும், உக்கிரமாகவும் அனுட்டிக்கப்படவிருக்கிறது. குடியரசு அரசியல் சட்டத்தை எதிர்த்தும் தனிநாடு கோரிக்கையை முன்வைத்தும் பரிபூரண ஹர்த்தால் தமிழ் ஈழம் முழுவதும் மே 21ம் நாள் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது.

மே 21ம் நாளை ஹர்த்தால் நாளாகவும், பாடசாலைப் பகிஷ்கரிப்பு நாளாகவும் அனுட்டிக்குமாறு தமிழர் கூட்டணி விடுத்துள்ள வேண்டுகோள் தமிழ் மக்களிடையே அபரிமிதமான ஆதரவைப் பெற்றுள்ளது. எங்கு நோக்கினும் மே 21 ஹர்த்தால் பற்றியும் மே 22 சட்டமறுப்பு பற்றியுமே மக்கள் ஆர்வமுடன் பேசிக்கொண்டிருக்கின்றனர்.


தமிழ்மாணவ மாணவியர்களிடையே முன் எப்போதுமில்லாத வேகமும் உணர்ச்

—5-ம் பக்கம் பார்க்க

## மகளிர் பேரவை செயலாளர் வேண்டுகோள்!

"மே 22— சட்டமறுப்பு ஊர்வலத்தில் தமிழ் மகளிர் பெருமளவில் பங்குகொண்டு, தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் தாய்க்குலத்தின் பங்கினை உறுதிப்படுத்த வேண்டும். எனவே மானத் தமிழ்ப் பெண்குலமே! மகளிர் பேரவையின் உறுப்பினர்களே! சட்டமறுப்பு ஊர்வலத்தில் பங்குபற்றிட மே 22ம் நாள் பிற்பகல் 2 மணிக்கு தமிழர் கூட்டணியின் தலைமைச் செயலகத்துக்கு வந்து சேருங்கள்!"

—இவ்வாறு தமிழ் மகளிர் பேரவை செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுக்கிறார்.



895 நாட்களை சிறையிலிருந்து மீண்ட சிங்கத் தமிழன் சேனாதிராசாவுக்கும் சிறை மீண்ட ஏனைய இளைஞர்களான சபாரத்தினம், இராசகுலசூரியர், குவேந்திரராசா ஆகியோருக்கும் கொழும்பு மாவட்டத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு ஆ ரகுபதிபால சிறீதரன் தமிழர் கூட்டணியின் உதயசூரியன் சால்வை போர்த்தி மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்.

## சட்ட மறுப்பில் பங்குபெற விரும்பும் வெளியூர் தொண்டர்களுக்கு

"மே 22 — சட்டமறுப்பு ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்கென யாழ்ப்பாணத்திற்கு வெளியேயுள்ள மாவட்டங்களிலிருந்து வர விரும்பும் தொண்டர்கள், தங்கள் சொந்த செலவிலோ அல்லது உள்ளூர் தமிழர் கூட்டணிக் கிளையின் உதவியுடனேயோ வரலாம். அவர்கள் யாழ்ப்பாணம் பிரதான வீதி 238ம் இலக்கத்திலுள்ள தமிழர் கூட்டணி அலுவலகத்தில் தங்குவதற்கும் அவர்களது உணவு வசதிகளையும் தமிழர் கூட்டணியின் தலைமைச்செயலகம் பொறுப்பேற்றுள்ளது!"

— இவ்வாறு தமிழர் கூட்டணியின் அமைப்புச்செயலாளர் கவிஞர் காசி ஆனந்தன் அறிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# அடிமைத்தனத்திற்கு பெயர் தேசிய ஐக்கியம் அல்ல!

இலங்கை தனது பெயரைச் சிறீலங்கா என்று மாற்றிக்கொண்டுவிட்டது. தனக்கென்று ஒரு அரசியலமைப்பை ஆக்கி அதில் ஒரே இனத்துக்கு எல்லாவகையான உத்தரவாதமும் உறுதிப் பாடும் பொறிக்கப்பட்டுள்ளது. இங்கு வாழும் இன்னும் ஒரு இனமான எல்லாத் தகுதிகளும் வாய்ந்த தமிழ் இனத்துக்கு பல்வேறு வகையான வஞ்சகங்கள்தான் பரிசாகத் தரப்பட்டுள்ளது.

சட்டரீதியான உத்தரவாதம் எதுவும் தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் அரசியல் சாசனத்தில் தரப்படவில்லை. பல்வேறு மதத்தி எதிர்காலக் கனவுகளோடு அடக்கு முறைக்கெதிராக ஐக்கியப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பிரதேச ஆக்கிரமிப்பு மொழித்திணிப்பு, இனமாற்றல் அல்லது இனக்கொலை என்ற இந்த இழிவான திட்டங்களின் அடிப்படையில் தமிழர் விரோத நடவடிக்கைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவைகளுக்கு மேலே சோசலிசச் சேலை போர்த்தப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்படும் பொழுது பாதுகாப்புத்தேடுவது, — பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது; படுபிற்போக்குத்தனம் — கூறிப் பயனில்லை. அவர்களும் அரசியல் நரிகளின் சாகசங்களில் ஏமாந்து விடுகிறார்கள். அவர்களைச் சுதந்திரமாகச் சிந்திக்கத் தூண்டுகின்ற அறங்கலந்த அறிவியக்கங்கள் அங்கு செல்வாக்குப் பெறவில்லை. புத்தபெருமானின் புனிதப் புகழுக்குப் பல மஞ்சட் காவிப் பிக்குகள் புதைகுழிதோண்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள அரசியற் கட்சிகளின் காவல்துறையாகவேபவுத்த இயக்கங்கள் வளர்ந்து வருகின்றன. ஆட்சிக்கு அறங்கூறும் அவையங்களாக விளங்கவேண்டிய இந்த இயக்கங்கள் ஆட்சிக்கொடுமைகளுக்கே ஆசான்களாக தேர்ந்த உளவியலாளர் முடிவாகும். இது சிங்கள ஆட்சியினருக்கும் அவர்களது கல்வித்துறைப் பேராசிரியர்களுக்கும் தெரியாததல்ல. மொழி வெறுங்கருவிதான் என்பவர்களும் அந்த இடத்தைத் தாய்மொழிக்குத்தான் கொடுக்கிறார்கள். சிங்களம் ஆட்சிமொழியாக இருக்கும்பொழுது பாடமொழிபற்றி அவர்கள் கவலைப்படவேண்டியதில்லைத்தான். இப்படி இருக்கும் பொழுது இந்தப்போதனு மொழித்திட்டம் இனமாற்றத்துக்குத் தவிர வேறெதற்குச் சட்டமாக்கப்பட்டிருக்கிறது.

'ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோசலிச நாடுகளுடன் தோழமை, கூட்டுச்சேராக் கொள்கை, வளர்முக நாடுகளுடன் சகோதரத்துவ அங்கத்துவம், உலக சமாதானத்துக்கு ஓயாத உழைப்பு...இப்படி ஏராளம் பெயர்ப்பலகைகள் இலங்கை அரசின் முகப்பில் தொங்கிக்கொண்டிருக்கிறது. உள்ளே பட்டினிச் சாவுகள், ஏக்கங்கள், ஒப்பாரிகள், ஓலங்கள், முனகல்கள் உள்நாட்டு அடக்குமுறைகள், வாய்ப்பூட்டுக்கள், இருட்சிறைகள் ... இப்படிப் பலப்பல. மொத்தத்தில் பாசிச வெறி

# தன்மானத் தமிழன் விழித்தெழுந்துவிட்டான்! விடுதலைக்கீதம் இசைக்கத் தொடங்கிவிட்டான்!

னர் வாழும் இந்த நாட்டில் பவுத்தத்துக்கே அரசியல் முக்கியத்துவம் வழங்கப்பட்டு யாப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசியற்கொள்கை முரண்பாடுகளை மறந்து சிங்கள மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்குள்ள கட்சிகள் யாவும் இணைந்துசெயல்படுகின்றன. அவர்களுடைய முரண்பாடுகள் எல்லாம் தங்களுடைய அந்தஸ்துக்களை நிலைநாட்டுவதிலுள்ள கெடுபிடியும்போட்டியும் தவிர வேறல்ல.

தமிழர்கள் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டி ஆக்கிரமிப் பற்ற பாதுகாப்பில் வாழக் கூடிய நியாயமான பச்சை வகுப்புவாதம் என்று கங்காணித் தரகர்களும் கைக்கூலிகளும் விடாப்பிடியாக வாய் கிழியக் கத்துகிறார்கள். தாங்களும் தங்களுடைய சிங்கள முதலாளிகளும் தமிழினத்துக்கு இழைக்கின்ற கொடுமைகளை மூடி மறைக்க இந்த மந்திரம் கண்மூடிச் செபிக்கப்படுகிறது. இதனால் அடக்குமுறைக்கு அட்டூழியங்களுக்கு எதிரான சிந்தனைகள் மந்தமாகிச்செயலற்றுப் போவதில்லை — இயக்கமாகி விடுதலைப் படையாகப் பரிணமிக்காமல் என்றும் இருந்துவிடுவதில்லை.

சிங்களக் கட்சிகளின் பின்னணியாக விளங்குகின்ற சிங்கள மக்களைக் குறை இருக்கின்ற அநியாயத்தைத்தான் நாம் அறியக் கூடியதாக இருக்கிறது.

இந்த மாயைகளிலிருந்து சிங்களச் சமூகம் விடுதலை பெறவேண்டும் இன்னுமொரு இனத்தை அடக்குவதும் சுரண்டுவதும் அறம் பழிக்கும் செயல்கள் என்று அச்சுறுத்தி சமுதாய நியாயங்களைப் பேணிக் காக்கக் கூடிய — தொடர்பான செயல் முறைகளில் ஈடுபடக்கூடிய பண்பாட்டியக்கம் ஒன்றின் மூலம்தான் சிங்கள மக்கள் காப்பாற்றப்படவேண்டும். சிங்கள மக்களுக்கும் விடுதலைவேண்டும். அரசை வெறுப்பதென்பது சிங்கள மக்களை வெறுப்பதாகாது.

தமிழன் ஐக்கியத்தை விரும்புகிறான். அடிமைத்தனம் அல்லது கோழைத்தனம் ஐக்கியமாக மொழிபெயர்க்கப்படுவதை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை வெறுக்கிறான். இப்பொழுது அடிமைத்தனந்தான் ஐக்கியமாகமொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஐக்கியம் என்ற பெயர்ப் பலகையைப் பெரிதாகத் தொங்கப்போட்டுவிட்டு பிரதேச ஆக்கிரமிப்பு அன்று தொட்டு இன்றுவரை வேகமாக நடந்துகொண்டிருக்கிறது. இது தொடருமானால் தமிழ்ப்பிரதேசங்களிலேயே தமிழன் சிறுபான்மை ஆக்கப்பட இன்னும் பல ஆண்டுகள் போகாது.

சிங்களப் பகுதிகளில் தமிழ்ப் பாடசாலைகள் புதிதாகக் கட்டப்படவில்லை. சிங்களப் பிள்ளைகள் தமிழைப் பாடமொழியாக ஏற்றுப் பயிலவில்லை. போதனு மொழி பெற்றோரின் விருப்பத்துக்குக் கையளிக்கப்பட்ட சதி தமிழ்ப் பிள்ளைகளின் நெஞ்சங்களில் ஆட்சிமொழி வஞ்சகம் எவ்வாறு செலுத்தப்படுகிறது என்பதை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலம் புரிந்துகொள்ளலாம்.

போதனு மொழி தாய் மொழியாக [illegible] டும் என்பதே மொழிப்பலம்

இந்த அரசாங்கம் அமைத்த கிளிநொச்சியிலுள்ள சிங்களப் பாடசாலையில் ஏறத்தாழ எண்பது விதமான தமிழ்ப் பிள்ளைகள் பயில்கிறார்கள். தற்போதைய தரப்படுத்தல் முறை இவர்களுக்கு ஒரு நல்ல உத்தியோக வாய்ப்பை — உயர்கல்விச் சலுகையை வழங்கும் பொழுது அந்த வஞ்சக வாய்ப்புக்களே கவர்ச்சியாகி குறிப்பிடக் கூடிய இனமாற்றத்துக்குத் துணைபுரியத் தூண்டலாம். தூண்டுகோலாக அமைய வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்தத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சிங்கள மக்கள் குறிப்பிடக் கூடிய அளவுக்கு வாழாத ஒரு இடத்தில் பவுத்த ஆலயம் விரிவு படுத்தப்படுகிறது —பள்ளிக்கூடம் கட்டப்படுகிறது என்றால் அங்கு பௌத்த சிங்கள மக்கள் குடியேற்றப் பட வேண்டும்; அல்லது மெல்லமெல்ல இல்லை விரைவாகவே அந்தப் பகுதியில் வாழ்கின்ற மற்றைய இன மக்கள் சிங்கள இனமாக மாற்றப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் இந்தப் பிரதேச ஆக்கிரமிப்பு வெறிவேகத்தில் நடைபெறுகிறது. திருகோணமலை தீவிர ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுவிட்டது.

நமது தோட்டத்தை ஆக்கிரமித்து அதிலே கத்தரியோ கஞ்சாவோ நாட்டி விட்டுதோட்டத்துள்ளே வெருளிப் பொம்மையும் நாட்டிவிடுவது போல நமது சொந்த மண்ணுக்குள் சிங்கள அரசின் சதிகள் என்ற பயிர்களை நாட்டி நம்மவர் சிலரைப் பிடித்து வெருளிப் பொம்மைகளாக வேஷம் போட்டு வைத்திருக்கிறது சிங்கள அரசு.

ஒருதலைப்பட்சம், இன ஒடுக்கல் என்ற கொடுமைகளுக்கு இலங்கையில் 'சோசலிச நடவடிக்கைகள்' என்ற பட்டயம் கட்டப்பட்டிருக்கிறது.

யின் முடை நாற்றம் வீசுகிறது.

சமுதாயப் பண்புகள் நாகரிகம் அடைவதற்கு இன ஒடுக்கலும், சுரண்டலும் பெரிய சவால்களாக அமைந்து விடுகின்றன. இதனால் தமிழன் தன்னைத்தான் ஆள்வதற்கு முடிவு கட்டிவிட்டான். இந்தப் புனித இலட்சியத்தை அடைய அவன் கட்டாக் காலித்தனத்தையோ, காட்டுமிராண்டித்தனத்தையோ கருவியாக்கமாட்டான். நிலைகுலையாத உள்ள உறுதியும், நெஞ்சத்தூய்மையும் அவனின் ஆயுதங்களாக இருக்கும். தமது நியாயங்களைக் காப்பதற்காக—அந்த நியாயங்களின் அடிப்படையான பிரச்சினைகளின் தீர்வுகளுக்காக அவன் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டே இருப்பான். அந்தச் செயல்களிலிருந்தே இயக்கம் பண்பட்டுப் பலம்பெற முடியும்; விடுதலைப் படையாக வேர் விட்டு விரிவடைய முடியும் என்று உணர்ந்து செயல்படத் தொடங்கிவிட்டான்.

அவனுடைய ஆத்மாவை அடிமையாக்கி வைத்திருந்த "தேசிய ஐக்கியம்" என்ற மாயையின் மந்திரவிலங்கு அறுந்து கொண்டிருக்கிறது. கிராமங்கள் தோறும் விடுதலைக் கீதம் வேகமாக ஒலித்துக்கொண்டு ஊடுருவிப் பரவுகிறது.

விடுதலையின் நாயகர்களாக எல்லாத் தமிழர்களுமே அணிபெறும் நாள் அண்மித்துவிட்டது. தமிழன் தனது நாட்டை அமைக்கும் பொழுதுதான் சிங்களவனும் தனது நாட்டில் அடிமைத்தனங்களிலிருந்து விடுபட்ட சுதந்திர மனிதனாக வாழ்வதற்குரிய அறிவைப் பெற முடியும். அந்த நிலையிற்றான் இன ஐக்கியம் புனிதமடையும்.

முரசை — லிங்கன்

## வரிப்புலியே வா வெளியே!

எரிகின்ற இளம் கதிர் எழுந்துவந்து சிரிப்பதுபோல்
இங்குள்ள எம் தமிழர் எழுச்சி பெற்றார்,
விரிகின்ற தமிழ் ஈழம் விழித்திட்ட விசைகண்டு,
வீங்கு தோளுயர்த்தி விரைகின்றார் களம்காண,
நம்நாடு நமக்கேயென்று நாம் கூறியதால்,
நாய்போல் கத்துவதேன் நரிக்குறவர்,
எம்மாட்சி எம்மண்ணில் மலர்ந்திட,
என்னதடை எமைநோக்கி வந்தாலும் — இப்
பொன்னுடலை பொசுக்கியேனும் பூக்கவைப்போம்
தமிழ் ஈழம், அன்னைத் தமிழ் மீது ஆணை, இது,
கற்பனையுமல்ல கதையுமல்ல நம் வரலாறு
இல்லை, காற்றடித்த திசைக்கொதுங்கி நாம்
கவளச்சோற்றுக்கு கைகட்டி நிண்ட வருமல்ல,
அற்புதமான ஆட்சிகண்ட அருந்தமிழன் கரிகாலன்
ஆவியின் உயிர் துடிப்பாய் அவதரித்திருக்கின்றோம்
இப்பிறப்பு அழிந்தாலென்ன, அந்த ஈனச்சிங்களவரின்,
சேனைக் கூட்டம் இழுத்தடித்தாலென்ன?
ஈழப்பிடரியிலே எங்கள் கொடி ஏற்றியே சாவோம்
மானமறக்குலமே வரிப்புலியின், வாயொடித்த தமிழா
வானிடிக்கும் போர்பறையின் வயிரமுளக்கம்
வாவென்று அழைக்குதடா, நீ வாவெளியே
சேனைத் தளபதி வைரநெஞ்சன் செல்வா
மோனத் தமிழ்காக்க முந்தியே செல்கின்றார்
ஏன் தயக்கம் இன்னும் தோழா,
இரத்த நாற்றமும் இரணக்களமும் யுத்தமுனையாக
மாறுவதைப் பார், செத்தழியும் செந்தமிழன்
மார்பினிலே செங்குருதி சிறுவதைப்பார்,
இத்தனையும் கண்ட பின்னும் இங்கொரு வாழ்வா
எமக்கு வேண்டும், கத்தும் கனலாறே
காக்க வேண்டும் தமிழ் ஈழம் இல்லை
போக்கவேண்டும் இவ்வுயிரை, இப்பூமிக்கே.

— கல்முனை நீ. செல்வராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாண்டுகள் பூர்த்தி; மூண்டெழட்டும் போர்த்தீ!

**அன்பு நண்பா,**

மூன்று ஆண்டுகள்! ஈழத்தின் முந்தைத் தேசிய இனமான தமிழினத்தின் முடியுரிமை— வெறிபிடித்த சிங்கள பௌத்த வல்லாட்சியின் புதிய அரசியல் சட்டத்தினுல் முற்றுக வேரோடு வெட்டிச்சாய்க்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைகின்றன — எதிர்வரும் 1975மே 22ம் நாளுடன்! எங்கோ இருந்துவந்த போர்த்துக்கீயனுலும் ஒல்லாந்தராலும் இறுதியாக ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தினுலும் யுத்த முனையில் கைப்பற்றப்பட்ட தமிழ் ஈழத் திரு நாட்டை — வெறிபிடித்த சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம், சனநாயகம் எனும் மூடுதிரைக்குள் மறைந்துநின்று கொண்டு — தனது 'காலனி' நாடாக்கும் சதித்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி மூன்று ஆண்டுகள் முடிவடைகின்றன!

ஆம்—சிங்கள இனம், தமிழ் இனத்தையும் தமிழ் ஈழத்தாயகத்தையும் என்றுவது வாள் முனையில் கைப்பற்றி அடிமைகொண்டதுகிடையாது; அமைதி வழியில் தமிழ் மக்களுடன் சமாதானம் செய்துகொண்டு அவர்களை ஆளுவதற்கு அனுமதியைப்பெற்றதும் கிடையாது! தனக்கிருக்கும் எண்ணிக்கைப்பலம் ஒன்றை மட்டுமே உபயோகித்து— சதித்திட்டமிட்டு— சனநாயகம் எனும் தலை எண்ணும் தந்திரத்தின் கீழ் — தமிழர்களையும் தமிழ ஈழத்தையும் ஆளுவதற்கும் — அடிமைப்படுத்தி அழித்தொழிப்பதற்கும் புதிய அரசியல் சட்டம் எனும் அஸ்திரத்தைப் பிரயோகித்து மூன்று ஆண்டுகள் முடிவடைகின்றன!

தமிழ் நாட்டையும் தமிழினத்தையும் சிங்களவனுக்கு முன்னர் அடிமைப்படுத்தி அடக்கியாண்டு வந்த அந்நிய ஏகாதிபத்தியங்கள்— தமிழர் நிலத்தை அபகரித்திடவும் தமிழ் இனத்தையும் மொழியையும் அழித்திடவும் முயற்சிக்கவில்லை; பொருளாதாரச் சுரண்டல் ஒன்று மட்டுமே அவர்களது நோக்கமாக இருந்தது. வெள்ளையன் சென்ற பின்னர் அரசியல் சதியினுல் தமிழ் ஈழ ஆட்சியையும் அபகரித்துக்கொண்ட சிங்களக்கொள்ளையர்களின் ஆட்சி— தமிழர்களின் நிலம், இனம், மொழி, மரபு, தனித்துவம் அனைத்தையுமே அழித்து ஒழித்துவிட 1948ம் ஆண்டு முதல் திட்டமிட்டு ஒவ்வொன்றுக செயற்படுத்தி வந்த இனக்கொலைத்திட்டங்களின் இறுதித் திட்டமே 1972ம் ஆண்டு மே 22ம் நாள் திணிக்கப்பட்ட புதிய அரசியல் சட்டமாகும்!

தமிழினத்தை குழிதோண்டிப் புதைத்து —தமிழ் ஈழநாட்டை சிங்களபௌத்த நாடாக்கும் இந்தச் சதிச் சட்டம் கொண்டுவரப்பட்டு எதிர்வரும் மே 22ம் நாளுடன் மூன்று ஆண்டுகள் முடிவடைகின்றன என்ருல்—இந்தப் புதிய சிங்கள ஏகாதிபத்திய காலனித்துவ சுரண்டல் சட்டத்தை எதிர்த்து இறுதிவரை போராடி —தமிழ் ஈழத் திருநாட்டை மீண்டும் தனி நாடாக அமைத்தே தீருவது என்று ஈழத் தமிழன் உறுதி பூண்டும் மூன்று ஆண்டுகள் முடிவடைகின்றன என்பதே அர்த்தமாகும்!

ஆம்— பிரிந்து பிளவுபட்டு அரசியலில் கட்சி பேதம், சாதி பேதம் பிரதேச பேதம் பேசி சிதைந்து நின்ற தமிழர்களது சக்திகள் அனைத்தும் — ஒரே கொடியின் கீழ் — ஒரே தலைவனின் கீழ் — தமிழர் கூட்டணியாகி தமிழ் ஈழத்தாயக விடுதலைப்போராட்டத்தில் குதித்து மூன்று ஆண்டுகளாகிவிட்டன! தமிழன் தொடுத்துள்ள விடுதலைப் போராட்டம் கடந்த 3 ஆண்டுகளாக நாளிலும் பொழுதிலும் விரிவடைந்து வருகிறதே தவிர—நிலைகுலைந்து போனதில்லை!

நம்முடைய வீர இளைஞர்கள் தமிழ் ஈழத் தாயகததின் அடிமைத்தளையை அறுப்பதற்கு தங்கள் வாழ்வையும் உயிரையும் அர்ப்பணிப்பதொன்றே தாங்கள் பிறவியெடுத்ததன்பெரும் பயன் என்று கருதி இன விடுதலைப்போரில் குதித்திருக்கிருர்கள்! கடந்த மூன்று ஆண்டுகளாக சிங்கள வெறியாட்சியின் இருட்சிறைக் கோட்டங்களில் தங்கள் வாழ்வை அழித்துக் கொண்டு இருக்கிருர்கள்! எத்தனையோ இளைஞர்கள் சிங்களவெறியர்களின் கைகளில் சிக்காமல் — தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி —காடுகளிலும் மேடுகளிலும் கண்காணு இடங்களிலும் கடல் கடந்த நாடுகளிலும் சுற்றியலைந்து கொண்டு — பசியும் பட்டினியும் மற்றும் பல பயங்கர சோதனைகளுக்கும் மத்தியில் தமிழ் ஈழத்தின் விடுதலைபற்றியே சிந்தித்துக் கொண்டு இருக்கிருர்கள்! பொலீசாரின் கழுகுக் கண்கள் எத்தனையோ வீரத்தமிழ் இளைஞர்களின் மீது வலை வீசியும் — அவர்கள் எதற்கும் அஞ்சாத கர்ம வீரர்களாக இன விடுதலை இயக்கத்தில் தம்மை இணைத்துக்கொண்டிருக்கிருர்கள்!

பசி,
பட்டினி,
பொலிஸ் வேட்டை,
சிறைத்துன்பம்,
காட்டிக்கொடுத்திடும்
எட்டப்பத் துரோகிகள்,

இவற்றுக்கு மத்தியிலே விடுதலைப் பசி கொண்ட வேங்கைகளாக உலா வருகின்றனர் நம் உடன் பிறப்புக்கள்! தமிழ் ஈழத்தின் ஊர்கள் எல்லாம் பாசறைகளாகி வருகின்றன; வீதிகள் எல்லாம் விடுதலைப் பயிற்சிக் கூடங்களாக ஆகிவருகின்றன; வீடுகள் எல்லாம் தியாகக்கோட்டங்களாக மாறிவருகின்றன. எங்கணும் விடுதலை உணர்வு கொழுந்துவிட்டெரிகிறது!

மூன்று சிறைச்சாலைகளில் 895 நாட்களாக தமிழ் ஈழ விடுதலைக்காக தவமிருந்துவிட்டு சிங்கம்போல கடந்த சனிக்கிழமை வெளியே வந்த மாவை சேனுதிராசாவையும்—தம்பிகள் இராசகுலசூரியர், சபாரத்தினம் ஆகியோரையும் யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் முத்தமிட்டு வரவேற்றபோது என் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்தது; அந்தத் தியாக வீரர்களின் கண்களில் ஒளிவிட்ட அந்த விடுதலை உணர்வும் வைராக்கியமும் உறுதியும் எனக்கே பேரெழுச்சியை ஊட்டின!

தம்பி சேனுதிராசாவிடம் காணப்பட்ட அமைதியும், அடக்கமும் இயக்கக் கட்டுப்பாடும் அஞ்சாநெஞ்சமும், ஆண்மையும், சுதந்

## அரசியல் அரங்கு

திரவேட்கையும் என்னைப்பெரிதும் கவர்ந்தன; அவரது தோற்றம் — சிறையில் அவர்மேற்கொண்ட தவத்தினுல் மெலிந்து எலும்பும் தோலுமாகக் காணப்பட்டாலும் — அந்தத் தோற்றத்தினுள்ளே இருந்து கம்பீரமாக வெளிப்பட்ட அந்த ஆத்மீக ஒளி — விடுதலைப் பேரொளி — யாரையும் வசியப்படுத்தும் சக்திவாய்ந்தது! தம்பி சேனுதிராசா சிறையிலிருந்து விடுதலையாகி ஆசையோடு வீடுவந்த சமயத்தில் — அவரது உயிருக்குயிரான தாய்மாமன் எதிர்பாராதவிதமாக காலனுக்கிரையாகிய துயரச்செய்தி கேட்ட நேரத்திலும் — கலங்காது தளர்ச்சியடையாது காட்சி தந்திட்ட அவரது அந்தக்கோலம் ஒன்றே அவர் ஒரு இலட்சிய வீரர் என்பதை எடுத்துக் காட்டிற்று!

இத்தகைய வீர இளைஞர்களை—தியாகச் சுடர்களை கொண்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கமான தமிழர் கூட்டணி புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்தும் தமிழினத்தின் சுதந்திரத் தாயகத்தை மீட்கும் பொருட்டும் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்திவருகின்ற புனிதப்போராட்டத்தில் ஒரு முக்கிய கட்டம்தான் எதிர்வரும் மே 21ம் 22ம் நாட்களில் தமிழ் ஈழத்தில் நடைபெறவிருக்கிற பகிஷ்கரிப்பு —ஹர்த்தால்— சட்ட மறுப்பு போராட்டங்களாகும்!

ஆம் நண்பா, தம் இனத்தையும் தமிழ்ஈழ நாட்டையும் அடிமைப்படுத்தி அழித்தொழிப்பதற்கு கொண்டுவரப்பட்ட புதிய பௌத்த சிங்கள ஏகாதிபத்திய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் புதைகுழிக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சட்டங்களுக்கு ஒருபோதும் அடிபணிந்து அடங்கிவாழ மாட்டார்கள்; தங்கள் சுயநிர்ணய உரிமையை பிரயோகித்து தனித்தமிழ் ஈழத்தை உருவாக்கும் விடுதலைப்போரில் அணிதிரண்டு முன்னேறுகிருர்கள் என்பதை அவனிக்கும் ஆட்சிக்கும் நாம், உணர வைத்திட வேண்டிய நாள்தான் எதிர்வரும் மே 22!

அதுவும்— பெப்ரவரி 6ம் நாள் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத் தேர்தலில்—புதிய அரசியல் சட்டத்தை முற்றுக நிராகரித்தும், தனிநாடு கொள்கையை அங்கீகரித்தும்தமிழினம்திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தீர்ப்பளித்துவிட்ட பின்னர் முதன் முதலாக வருகின்ற சிங்களக் குடியரசு நாளான எதிர்வரும் மே 22ம் நாள் தமிழ் ஈழத்தில் மூர்த்தண்யமான எதிர்ப்பு நாளாகவும் கரி நாளாகவும், சட்டமறுப்பு நாளாகவும் அனுட்டிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதும், அவசரமானதுமாகும்!

சிங்கள ஏகாதிபத்தியமே! தமிழினம் உன் கொத்தடிமைச் சட்டத்தை கூண்டோடு வெட்டிப் புதைத்துவிட்டது; ஈழத் தமிழன் உனது உருட்டல் மிரட்டல்களுக்கும், அடக்குமுறைச் சட்டங்களுக்கும், பொலீஸ் இராணுவ படைபட்டாளங்களுக்கும், துப்பாக்கிகளுக்கும் பீரங்கிகளுக்கும் குண்டாந்தடிகளுக்கும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளுக்கும் இனிமேலும் அஞ்சி அடங்கி உன்னைக் கெஞ்சிக் கிடக்கமாட்டான்! அவன் சுதந்திரமுள்ள மனிதனுக வாழ முடிவெடுத்துவிட்டான்! தனது பழம் பெரும் பாரம்பரியத்தாயகமாம் தமிழ் ஈழத் திருநாட்டை மீட்டுக்கொள்ள முடிவெடுத்து விட்டான்! என்பதை அறுதியிட்டுரைக்கும் நாட்கள் தான் எதிர்வரும் மே 21, 22ம் நாட்கள்!

மே 21ம் நாளை சிங்களக் குடியரசு எதிர்ப்பு ஹர்த்தால் நாளாக—கரி நாளாக— தமிழ் ஈழம் அடங்கிலும் அனுட்டிக்கும்படி தமிழர் கூட்டணி தமிழினத்தைக் கோரியிருக்கிறது!

தமிழர் கூட்டணி எதைச் சொன்னுலும் அதைச் செய்வதற்கு தமிழ் மக்கள் எப்போதும் தயாராகவேயிருக்கிருர்கள்! இதற்கு முன்னர் தமிழ் ஈழத்தில் நடைபெற்ற ஹர்த்தால்கள்—பாடசாலைப் பகிஷ்கரிப்புக்கள்— எதுவும் சோடை போனதில்லை—அத்தனையுமே நூற்றுக்கு நூறு வெற்றியளித்திருக்கின்றன என்பது நமக்குத் தெரியும்!

தமிழர் கூட்டணியின் வேகம் போதாது; தமிழர் கூட்டணியின் தலைவர்கள் அனைவரும் விடுதலை இயக்கத்தில் முழு நேர ஊழியர்களாக ஈடுபடுகிருர்களில்லையே; முறையான அமைப்பு ரீதியில் கூட்டணி இயங்கவில்லையே; என்கிற இதுபோன்ற சில பல தாபங்கள் தமிழ் இளைஞர்களுக்கு மத்தியில்—தமிழ் மாணவ சமுதாயத்துக்கு மத்தியில்—இருப்பது உண்மைதான் என்ருலும்—தமிழர் கூட்டணியே தமிழினத்தின் ஒரே விடுதலைப் பேரியக்கம்; அமைப்பு ரீதியில் அதைப் பலப்படுத்தி, அதன் மூலமே தமிழர்களின் இன விடுதலையை மீட்டுக்கொள்ள முடியும் என்கிற அடிப்படைக் கருத்திலே யாருக்கும் எதுவித கருத்துவேற்றுமையும் இருக்க முடியாது. எனவேதான் தமிழர் கூட்டணியின் ஆணைக்கு—வேண்டுகோளுக்கு—ஈழத் தமிழன் எச்சமயத்திலும் கட்டுப்பட்டு அதன் இயக்கங்களுக்கு இமாலய வெற்றி சேர்த்து வருகிருன்!

எனவே நண்பா, மே 21ம் நாளை, அநீதியின் மொத்த உருவமான சிங்களக் குடியரசு அரசியல் சட்டத்தைப் பொடிப்பொடியாக்கி தமிழ் ஈழத் தாயகத்தை விடுவித்தே தீருவோம் எனும் நமது உறுதிப்பாட்டைஎடுத்துக் காட்டிட — தமிழ்ஈழ மடங்கிலும் பரி பூரண ஹர்த்தால் அனுட்டிப்போம்!

● தமிழ்பேசும் வர்த்தகர்களே! மே 21ம் நாளில் உங்கள் கடைகளைப் பூட்டிவையுங்கள்!

● தொழிலகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் அனைத்தையும் மூடிவைப்பீர்!

● என் இரத்தத்தின் இரத்தங்களான—இதய நாளங்களான மாணவ சமுதாயமே! பாடசாலைகளையும் கல்லூரிகளையும் மே 21ம் நாள் பூரணமாகப் பகிஷ்கரியுங்கள்! உங்கள் பாடசாலைகளில் நடைபெறும் குடியரசு தினக் கொண்டாட்டங்களில் பங்குபற்றிட முடியாது என்று அடித்துக் கூறிவிடுங்கள்; அவற்றை முற்றுகப் பகிஷ்கரியுங்கள்! இதை உங்கள் தலைவன் சிவகுமாரன் மீது ஆணையாகசெய்யுங்கள்!

● மானமுள்ள தமிழ் தந்தை தாயர்களே! உங்கள் பிள்ளைகளை மே 21ம் நாளன்று பாடசாலைகளுக்கு அனுப்பாதீர்கள்!

-8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## மே - 22

எதிர்வரும் மே 22ம் நாளுடன் புதிய குடியரசு அரசியல் சட்டம் தமிழ் மக்கள் மீது—அவர்களின் விருப்பமின்றி அவர்களது சம்மதம் துளியுமின்றி—பலவந்தமாகத் திணிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைகின்றன.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் புதிய குடியரசு அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில்—அதில் தமிழ் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்புக்களையும் உள்ளடக்கக் கூடிய விதிகளைப் புகுத்துவதற்கு எவ்வளவோ தூரம் விட்டுக்கொடுத்தும், பாதிவழி இறங்கி வந்தும்—தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ இயக்கமான தமிழர் கூட்டணி எடுத்த அத்தனை முயற்சிகளும் பௌத்த சிங்கள ஏகாதிபத்திய வெறிகொண்ட சிங்கள அரசியல் தலைவர்களால் நிராகரிக்கப்பட்டன; தூக்கியெறியப் பட்டன!

குடியரசு அரசியல் சட்டம் தமிழ் மக்களினதும் அவர்களது பிரதிநிதிகளினதும் பகிஷ்கரிப்புக்கும் பலமான எதிர்ப்புக்கும் மத்தியில் 1972ம் ஆண்டு மே 22ம் நாள் சட்டமாக்கப்பட்டது. ஆனும் சிங்களத் தலைவர்கள் அதைச் சட்டமாக்கிய அதே நேரத்தில் அச்சட்ட நகலுக்கு தீ மூட்டி எரித்து தமிழ் மக்கள் அதை முற்று முழுதாக நிராகரித்து விட்டனர்!

இதன் பின்னர், புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால்—ஆறு அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் அது திருத்தப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் கோரினர். எந்த எந்த விதத்தில் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டுமென்பதை உள்ளடக்கிய ஆறு அம்சக் கோரிக்கையை தமிழர் கூட்டணி ஆட்சியாளருக்கு அனுப்பி வைத்தது. இந்த ஆறு அம்சக் கோரிக்கையை ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்தியது மட்டுமல்ல—அதுபற்றி பேசுவதற்கே கூட திமிர்த்தனமாக மறுத்துவிட்டனர்!

இதன் பின்னர்—தமிழ் மக்கள் புதிய அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்கிற ஆட்சியாளர்களின் வாதம் பொய்யானது என்பதை நிரூபிக்கவும், அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள் என்பதை சனநாயகரீதியில் உறுதிப்படுத்தவும் தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் தந்தை செல்வா அரசுக்கு சவால்விடுத்து தமது காங்கேசன்துறை தேசிய பேரவை உறுப்பினர் பதவியை 1972ம் ஆண்டு அக்டோபர் 3ம் நாள் ராஜினாமா செய்தார்.

இந்த இடைத்தேர்தலில் தனது முகத்திரை கிழிக்கப்பட்டு விடுமென்கிற அச்சத்தினால் இரண்டு ஆண்டுகளாக அதை நடத்தாமல் இழுத்தடித்து வந்த சிங்கள ஏகாதிபத்தியம் இறுதியில் உலக அபிப்பிராயத்துக்கு அஞ்சி சென்ற பெப்ரவரி 6ம் நாள் இடைத்தேர்தலை நடத்தி முடித்தது. இடைத் தேர்தலில் புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்துப் போட்டியிட்ட அரசாங்க வேட்பாளரை அரசியல் சட்டத்தை எதிர்த்தும், தனிநாடு கோரிக்கையை முன்வைத்தும் போட்டியிட்ட மூதறிஞர் தந்தை செல்வா 16,000 அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடித்தார்.

இந்த இடைத்தேர்தல் முடிவு—தம் மீது திணிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்கிறார்கள் என்பதையும், சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமைகளாக அழுந்திக்கொண்டிராமல், தங்கள் தலைவிதியை தாங்களே நிர்ணயித்துக்கொள்ள இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனம் உறுதிபூண்டிருப்பதையும் தீர்க்கமாகவும் துலாம்பரமாகவும் உலகுக்கு எடுத்துக் காட்டியது.

சனநாயகம் தந்துள்ள இந்த உரிமையை பயன்படுத்தி தங்கள் அபிலாஷைகளையும் உரிமை வேட்கையையும் உள்ளக் குமுறலையும் தமிழ் மக்கள் இவ்வளவு தூரம் திட்டவட்டமாகவும் துலாம்பரமாகவும் எடுத்துக் காட்டியும், இன்றைய சிங்கள பௌத்த ஏகாதிபத்திய வெறியர்களின் அதிகார வெறிபிடித்த செவிகளில் இன்னும் அது உறைத்ததாகத் தெரியவில்லை! தங்களிடமுள்ள படைபலத்தையும் அதிகார பலத்தையும், எண்ணிக்கைபலத்தையும்கொண்டு தமிழ்ஈழத் தேசிய இனத்தின் சுதந்திரக்கோரிக்கையையும் ஏனைய நியாயமான அபிலாஷைகளையும் நசித்து அடக்கியொடுக்கி அழித்துவிடலாமென்கிற ஆணவ முனைப்புத்தான் ஆட்சியாளரிடம் மித மிஞ்சி தலையெடுத்து நிற்கிறது.

சிங்கள ஆட்சியாளரிடம் ஆணவமும், ஆதிக்க வெறியும், அடக்குமுறையும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அடக்கப்படும்—அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும்—தமிழ் இனத்திடம் உறுதியும் தன்னம்பிக்கையும் தியாகமும், துணிச்சலும் சுதந்திரத்துக்காக எதையும் துச்சமாகக் கருதும் பேராவேசமும் வளர்ந்துகொண்டு வருகிறது நதிகள் ஒருபோதும் பின்னோக்கிப்பாய்வதில்லை; சுதந்திரமாக வாழத்துடிக்கிற மக்களும் இலட்சியப் பாதையிலிருந்து ஒருபோதும் பின்வாங்குவதில்லை!


தமிழ் இனத்தாரிடம்—குறிப்பாக தமிழ் இளைஞர்களிடம்—பொங்கி வழிகின்ற தீவிரமும் துணிச்சலும் தியாக உணர்வும், கடந்த மூன்றாண்டுகளாக பல்வேறு சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் அவர்கள் நடந்து வரும் தியாகப்பாதையும் — தங்களையே அர்ப்பணிக்கின்ற மாவீரமும் தமிழினம் தனது மீட்சியை அடைந்தே தீரும் என்பதற்கு சாட்சியாக விளங்கிவருகின்றன!

குடியரசு அரசியல் சட்டத்தை எதிர்த்தும் தமிழினம் தன்னைத்தானே ஆளவேண்டும் என்கிற விடுதலை முழக்கத்தை முன் வைத்தும் மே 21ம் நாள் தமிழ் ஈழமெங்கிலும் நடைபெறுகின்ற ஹர்த்தாலும் பாடசாலைப் பகிஷ்கரிப்பும் தமிழினத்தின் தளரா உறுதியையும் துணிச்சலையும் தன்னம்பிக்கையையும் உலகுக்குப் சிங்கள அரசுக்கும் எடுத்துக்காட்டுவதாக வெற்றிகரமாக அமையட்டும்!

மே 22ம் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் சட்டவிரோத ஊர்வலம் ஈழத் தமிழனின் உறுதிக்கும், எதிர்காலத்தில் அவன் நடத்தவிருக்கும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டங்களுக்கும், படைக்கவிருக்கும் தியாக வரலாறுகளுக்கும் கட்டுப்பாடான ஒரு பயிற்சிக் கூடமாக அமையட்டும்!

தமிழ் ஈழத்தின் விடுதலையை நம் தியாகத்தினால் எழுதுவோம்!

## விடுதலை வீரர்களுக்கு வரவேற்பு!



சிறை மீண்டபின்னர் கடந்த 11-5-75 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் முதன் முதலாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த மாவை சேனாதிராசா, சபாரத்தினம், இராசகுலசூரியர் ஆகியோருக்கு யாழ் புகையிரத நிலையத்தில் தமிழ் மக்களால் குதுகல வரவேற்பளிக்கப்பட்ட பின்னர் அவர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படும் காட்சி. படத்தில் சிறை மீண்ட இளைஞர்களுடன் மறைந்த மாவீரன் சிவகுமாரனின் தாயார் திருமதி அன்னலட்சுமி, கவிஞர் காசி ஆனந்தன், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## தமிழ் ஈழக்கோரிக்கைக்கு ஆதரவாக இலண்டனில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

"நாங்கள் தமிழர்கள், எமது தாயகம் ஈழம், எமது சுதந்திரத்தை நாம் நிலைநாட்டுவோம். மலையகத்து மக்கள் இலங்கைத் தமிழர்கள், இலங்கைத் தேயிலையைப் பகிஷ்கரியுங்கள், உலக நாடுகளே ஈழப்பிரிவினைக்கு ஆதரவு தாருங்கள்"

என்ற பலத்த குரலொலி இலண்டன் மாநகரின் பிரதான வீதிகளாகிய (Marble Arch, Park Land, Hyde Park, Piccadilly, Hay market, Trafalgar Square, White Hall) ஆகியவற்றில் 26-4-75ல் எழுப்பப்பட்டது. சிங்கள ஏகாதிபத்தியம் தமிழர்கள் மீது நாளுக்கு நாள் சுமத்துகின்றகொடிய சமூக, அரசியல், பொருளாதார தாக்கங்களால் தமிழர்கள் ஈழ நாடாக பிரிய வேண்டிய கட்டாயத்தையும், முக்கியத்துவத்தையும் பொது நலவாய நாடுகளின் பிரதமர்களிடம் எடுத்துவிளங்கும் படி பிரித்தானியப் பிரதமரானமாண்புமிகு ஹரோல்ட் வில்சன் அவர்களை வேண்டிக் கொள்வதற்கென ஈழவிடுதலை முன்னணியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 200ற்கும் அதிகமான இளைஞர்கள் கலந்துகொண்டு இலண்டனின் மிகப் பிரதான வீதிகளில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் முன் பலத்த கூக்குரல் எழுப்பினர்.

Hyde Parkல் உள்ள Speakers Cornerல் பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம், பிற்பகல் 400 மணிக்கு பிரதமரின் வாசஸ்தலமான 10, Downing Street ஐ அடைகிறது. அங்கு பிரதமரின் பிரதிநிதியிடம் இயக்கத்தினரால் தயாரிக்கப்பட்ட மகஜர் கையளிக்கப்பட்டது.

முன்னணியின் தலைவர் பின்வரும் உண்மைகளை ஊர்வலத்தில் திரண்டிருந்தவர்களிடம் இடித்துரைத்தார்; நசுக்கப்படும் தமிழ் மக்களின் ஒற்றுமை வளர்கிறது. சமதர்மதத்துவத்தின் அடிப்படையில் வளர்கிறது. இது சிங்கள ஏகாதிபத்தியத்திற்கும் தமிழ் மக்களிடையே உள்ள முரண்பாடுகளுக்கும் நிரந்தர முடிவை அளிக்கும், இரத்தமே விடுதலையின் பாதை. இதுவே சிவகுமாரனின் பாதை இதுவே எமது பாதையும்"

முக்கியமாக, இங்கிலாந்துக்கு செல்லும் பாதையில் 26ம் திகதி இலண்டனில் தங்கியிருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு இங்கிருந்து எழுப்பும் பிரிவினைக் குரல் அதிர்ச்சியைக்கொடுத்திருக்கும்.

## யாழ்வளாகம்
## சிங்கள வளாகம் ஆகிறது!

தமிழன் தன்னுடைய சொந்தப்பணத்தில் கட்டிய திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியையும் யாழ்ப்பாணக் கல்லூரியையும் அரசுடைமையாக்கி அங்கே பல்கலைக்கழக வளாகமமைத்த பின்னர் இப்போது அங்கே நடைபெறுவது என்ன தெரியுமா? சிங்கள மயம்!

ஆம், இந்த வருடம் யாழ் வளாகத்திற்கு அனுமதிக்கப்பட்ட 294 மாணவர்களில்—156 பேர் சிங்களவர்கள் — 138 பேர் மட்டுமே தமிழ் மாணவர்கள்!

தமிழ் மாணவன் தன் சொந்த நாட்டிலேயே ஒதுக்கப்படுகிறான் — சிங்கள ஆதிக்கம் வளாகம் என்ற போர்வையில் யாழ்ப்பாணத்தில் திணிக்கப்படுகிறது! இதுதான் உனக்கு குடியரசு தந்த பரிசு! இதை உணர்ந்து கிளர்ந்தெழு தமிழ் மாணவனே!

## தவில்வித்துவான் தெட்சணாமூர்த்தி காலமானார்!

புகழ்பெற்ற தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தி இவ்வுலகை விட்டுப்பிரிந்துவிட்டார். வித்துவான் தெட்சணாமூர்த்தியின் மறைவு இசை உலகுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

இலங்கையில் மட்டுமல்ல கடல் கடந்த நாடுகளிலும் தமது தவில் வித்துவத்தை இசைத்துக் காட்டி அந்நாட்டு மக்களின் பெரும் புகழையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தங்கம்மா அப்பாக்குட்டி மலையகம் வருகின்றார்!

இலங்கை அறிவு இயக்க வள்ளுவர் விழாவிலே பங்குபற்றி அறிவுப் பேருரை வழங்கிட சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 24-5-75 சனிக்கிழமை அட்டன் ஹைலண்ஸ் கல்லூரிக்கும், 25-5-75 ஞாயிற்றுக்கிழமை நுவரெலியாப்புனித சேவியர் கல்லூரிக்கும் வருகை தருகின்றார்.

## வரவேற்பு!

தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வாவுக்கும் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் 20-5-75 செவ்வாய்க்கிழமை மாலை யாழ்கோட்டை மைதானத்தில் ஒரு பிரமாண்டமான வரவேற்பை யாழ்ப்பாண மக்கள் அளிக்கின்றனர். இதற்கான ஒலிபெருக்கி அனுமதி இப்போது கோரப்பட்டுள்ளது.


## தேவை

கொழும்பு கோட்டடியில் உள்ள ஓர் அலுவலகத்துக்கு தற்காலிகமாக ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை.

மே/பா சுதந்திரன்,
194-ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இராணுவக்கட்டுப்பாடுள்ள ஒரே இயக்கமே தமிழ்ஈழ விடுதலைக்கு வழிகாட்ட முடியும்!"

## சிறைமீண்ட சேனாதிராசாவின் எழுச்சி முழக்கம்!

"இராணுவக் கட்டுப்பாடுள்ள ஒரே இயக்கமே தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு வழிகாட்டமுடியும். பலஇயக்கங்களாக பிரிந்து இயங்குவதால் இனத்துக்குப் பெரும் பலவீனமே ஏற்படும். என் உயிரைப் பணயம் வைத்தாவது இராணுவக் கட்டுப்பாடுள்ள ஒரே இயக்கத்தை உருவாக்குவதற்கு முழுமுயற்சியும் எடுப்பேன்!"

—இவ்வாறு 895 நாட்கள் சிறையிருந்து அண்மையில் விடுதலையான சிங்கத்தமிழன் மாவை சேனாதிராசா தமிழர் கூட்டணி அலுவலகத்தில் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சிறையிலிருந்து விடுதலையாகி கொழும்பிலிருந்து யாழ்தேவி மூலம் யாழ்ப்பாணம் திரும்பிய மாவை சேனாதிராஜாவுக்கும், இணுவிலைச் சேர்ந்த செல்வன் இராசகுலசூரியர், கல்வியங்காட்டைச் சேர்ந்த செல்வன் சபாரத்தினம் ஆகியோருக்கும் யாழ் ரயில் நிலையத்தில வைத்துசென்ற ஞாயிற்றுக்கிழமை குதூகல வரவேற்பளிக்கப்பட்டது. தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம். காசி ஆனந்தன் ஆகியோருட்பட கூட்டணியின் முக்கிய தலைவர்களும், பா.உ.க்களும் பிரமுகர்களும், இளைஞர்களும் பெரும்தொகையாகதிரண்டு நின்று ஆனந்தக் கண்ணீர் வழிய ஜெயகோஷங்களுடன் சிறைமீண்ட செம்மல்களை ஆர்வப்பெருக்குடன்உணர்ச்சிபூர்வமாக வரவேற்றனர்.

தந்தை செல்வா சிறை மீண்ட தியாக வீரர்களுக்கு தம் கையினல் மாலைசூட்டி வரவேற்ற காட்சி நெஞ்சை நெகிழவைத்தது. இளைஞர்கள்சிறைமீண்ட தங்கள் தலைவர்களைத் தோளில் சுதந்தபடி வாழ்த்தொலியெழுப்பினர். வெற்றி முழக்கங்களுடன் சிறைமீண்ட செம்மல்கள் தமிழர் கூட்டணி அலுவலகத்துக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் சிறைமீண்ட இளைஞர்களை வாழ்த்தி நாவலர் அமிர்தலிங்கம், காசி ஆனந்தன் உரையாற்றினர்.

### சாவகச்சேரியில் வரவேற்பு!

"எனக்கு மலர்மாலைகளோ வரவேற்புக்களோ வேண்டாம்; நான் இவற்றை எதிர்பார்த்து சிறைசெல்லவில்லை. இனத்துக்காகவும், நான்ஏற்றுக்கொண்ட இலட்சியத்துக்காகவுமே சிறை சென்றேன். மீண்டும் செல்லவும் தயாராக இருக்கிறேன். சிறையில் எனக்கு நடந்த கொடுமைகள் பற்றியும் நான் கூறத் தயாராகஇல்லை. அவையெல்லாம் என் இலட்சியத்துக்காக இன்முகத்துடன் நான் ஏற்றுக்கொண்டவையே!"

இவ்வாறு சாவகச்சேரி சந்தை மைதானத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசிய சிங்கத் தமிழன் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டார்.

---

# வண்ணை ஆனந்தன் இவ்வாரம் விடுதலை!



வெலிக்கடைச்சிறையில் இன்றுடன் (18-5-75) 1071 நாட்களாக சிறை வைக்கப்பட்டிருக்கும் வண்ணை ஆனந்தன் இந்த வாரம் விடுதலை செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற 10-5-75ல் விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் பெயர்களும், அவர்கள் கைதுசெய்யப்பட்டதிகதிகளும் வருமாறு:-

மாவை சோ. சேனாதிராசா— கைதுசெய்யப்பட்ட திகதி 9-3-1973.

எம். மதியாபரணம் — கைதுசெய்யப்பட்ட திகதி 27-6-1972.

எஸ். சிறீஸ்கந்தராசா— கைதுசெய்யப்பட்ட திகதி 4-4-1973.

எம். இராசகுலசூரியர் — கைதுசெய்யப்பட்ட திகதி 30-6-1972.

எஸ். குவேந்திரராசா— கைதுசெய்யப்பட்ட திகதி 9-7-1972.

எஸ், சபாரத்தினம் — கைதுசெய்யப்பட்ட திகதி 10-3-1973.

எஸ். குருகுலசிங்கம்.

சிறைமீண்ட விடுதலை வீரர்களுக்கு தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் 10-5-75 மாலை திரு. ஆ. ரகுபதிபாலசிறிதரன் தலைமையில் குதூகலமான வரவேற்பொன்றை அளித்தனர்.

---

## மே22 சட்டமறுப்..

—1-ம் பக்கத் தொடர்

வேண்டும் என்று இக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஊர்வலம் செல்லுகின்ற பாதைகள், ஊர்வலம் தொடங்கும் இடம், கூட்டம் நடைபெறும் இடம் ஆகியவை இறுதிவரை இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கும்.

முன் கூட்டியே தமிழர் கூட்டணி நடவடிக்கைக்குழு உறுப்பினர்களும் பா. உ.க்களும் ஏனைய முன்னணித் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டால்—அல்லது ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுமானால் மட்டுமே இந்த சட்ட விரோத ஊர்வலம் கைவிடப்படும் என்றும் இவை தவிர வேறு எந்த விதச் சூழ்நிலை ஏற்படினும் திட்டமிட்டபடி ஊர்வலம் நடைபெற்றே தீரும் என்றும் கூட்டணியின் உயர் மட்டத்தலைவர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்

இதற்கிடையே இந்தச் சட்டவிரோத ஊர்வலம் மீது என்ன நடவடிக்கையெடுப்பது என்று தெரியாமல் அரசாங்கம் கைபிசைந்து நிற்பதாக தெரிய வருகிறது.

- தமிழர் கூட்டணி தலைவர்களையும் முன்னணிப் பிரமுகர்களையும் பா. உ.க்களையும் முன்கூட்டியே கைதுசெய்யலாம்—
- ஊரடங்கு சட்டத்தை பிறப்பிக்கலாம்—
- ஊர்வலத்தினர் மீது குண்டாந்தடிகளையும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பிரயோகித்து ஊர்வலத்தை கலைக்கலாம்.
- அல்லது ஒன்றுமே தெரியாதவர்கள் போல இதில் அறவே தலையிடாமல் அரசு இருந்துவிடலாம்.

இந்த நான்கு வழிகளில் எதையோ ஒன்றை அரசு செய்தே ஆகவேண்டும். இதில் எதைச் செய்தாலும் அது தமிழர் கூட்டணியின் இயக்கத்துக்கு வெற்றியாகவே அமையும்!

எனவேதான் அரசாங்கம் இது விடயத்தில் எதுவித முடிவும் எடுக்கமுடியாமல் குழம்பிக்கிடப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

---

## பாடசாலை பகிஷ்..

—1-ம் பக்கத் தொடர்

சிப் பெருக்கும் நிறைந்து காணப்படுகிறது மே 21ம் நாள் பாடசாலைகளுக்கு செல்வதில்லையென்றும் குடியரசு கொண்டாட்டங்களில் பங்கு கொள்வதில்லையென்றும் மறைந்த விடுதலை விரன் தியாகி சிவகுமாரன் மீது அவர்கள் ஆணையிட்டு உறுதி செய்திருக்கின்றனர். மே 22 சட்டமறுப்பு ஊர்வலத்தில் பங்குபற்றவும் அவர்கள் ஆர்வமுடன் முன்வந்திருக்கின்றனர். தமிழர் கூட்டணியின் மாணவத் தலைவர்கள் பாடசாலைப் பகிஷ்கரிப்பு குறித்து தீவிரபிரசாரம் செய்து வருகின்றனர். பாடசாலைப் பகிஷ்கரிப்பு குறித்து துண்டுப்பிரசுரங்களும் ஏராளம் வெளியிடப்பட்டுள்ளன.

வழமையாகவே தமிழர் கூட்டணியின் ஆணைப்படி நடைபெறும் ஹர்த்தால்களையெல்லாம் வெற்றியாக்கித்தரும் தமிழ் பேசும் வர்த்தகப் பெருமக்கள் இம்முறையும் தங்கள் பூரண ஒத்துழைப்பை தந்து ஹர்த்தாலை பூரணவெற்றியாக்க இருக்கின்றனர்.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பிலும் முன்னெப்போதையும் விட இம்முறை ஹர்த்தால் வெகு தீவிரமாகவும் விறுவிறுப்புடனும் அனுட்டிக்கப்படவிருக்கிறது. கடைகள் அனைத்தும் பாடசாலைகள் அனைத்தும் மூடப்படவிருக்கின்றன. மட்டக்களப்பிலிருந்து சட்டமறுப்பு ஊர்வலத்தில்கலந்துகொள்ள நூற்றுக்கணக்கான இளைஞர்கள் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இதே போல—திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, போன்ற இடங்களிலும் மே 21 ஹர்த்தால் ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

---

## தமிழ் இளைஞர் பேரவையை சீராக அமைத்திட சேனாதி திட்டம்!

தமிழ் இளைஞர் பேரவையை வலுவுள்ள சீரான கட்டுப்பாடும் கட்டுக்கோப்புமுள்ள ஓர் இயக்கமாக அமைப்பதே தமது உடனடிப் பணியாக இருக்குமென சிறைமீண்டசெம்மல் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

---

# விளையாட்டுப் போட்டிகளிலும் சிங்கள மொழித் திணிப்பு!

## மன்னார் தமிழ் இளைஞர்களின் எதிர்ப்பு!

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெறும் மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி அண்மையில் நானாட்டானில் நடைபெற்றது, இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீரர்கள் வீராங்கனைகளுக்கு வழங்கப்படவிருந்த நற்சாட்சிப்பத்திரம் தனிச்சிங்களத்தில் அச்சிடப்பட்டு இருந்ததால், வங்காலை புனித ஆனாள் விளையாட்டுக் கழகம், முருங்கன் ஐக்கிய விளையாட்டுக் கழகம், கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதலிடத்தைத் தட்டிக்கொண்ட முருங்கன் ஜெயராஜாவை உள்ளடக்கிய 6 பேர் கொண்ட அணி, ஆகிய மூன்று கழகங்களும் தங்கட்குக்கிடைக்கவிருந்த வெற்றிக்கிண்ணத்தையும் நற்சாட்சிப்பத்திரங்களையும் வாங்காது பகிஷ்கரிப்பில் இறங்கியது.

இறுதியில் இளைஞர்கள், சிங்கள ஏகாதிபத்தியம் ஒழிக! தமிழ் ஈழம் அமைப்போம், உயிர்கொடுப்போம் தமிழ் மொழிக்கு என்னும் கோஷங்களை எழுப்பிய வண்ணம் அங்கிருந்து கலைந்து சென்றனர். மன்னார் அரசாங்க அதிபர், முசலி உதவி அதிபர் ஆகியோர் முன்னிலையில் இளைஞர்கள் நடத்திய இப்போராட்டத்தை மன்னார் வாழ் தமிழ் மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.

---

## அமிர்தகழியில் காசிக்கு வரவேற்பு!

உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தனுக்கு மட்டக்களப்பைச்சேர்ந்த அமிர்தகழி புன்னைச்சோலை, மட்டிக்கழி, பாலநகர் ஆகிய பகுதி மக்கள் 17-5-75 சனிக்கிழமை ஓர் வரவேற்பை அளிக்கின்றனர், இவ்வரவேற்புக் கூட்டத்தில் கூட்டணித் தலைவர்கள் உரையாற்றுவர்.

18-5-75ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு திறந்தவெளியரங்கில்மாபெரும்பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தவும் மட்டக்களப்பு தமிழர் கூட்டணி பொலிசாரிடம் உத்தரவு கோரியுள்ளது.

---

## சட்டமறுப்புக்கு கொழும்பிலிருந்து 25 இளைஞர்!

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்பு மாவட்டக் கிளையின் சார்பில் மே22 — சட்டமறுப்பு போராட்டத்தில் 25இளைஞர்கள் பங்குபற்றவிருக்கின்றனர். மே21 குடியரசு எதிர்ப்பு ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்தும்படி தமிழ் மக்களுக்கு கோரிக்கை விடுக்கும் துண்டுப் பிரசுரங்களையும் குடியரசு எதிர்ப்பு சுவரொட்டிகளையும் கொழும்புக் கிளையினர் வெளியிட்டுள்ளனர்.

தம்பிலுவில் தமிழ் இளைஞர் பேரவையும் மே21 குடியரசு துக்கதினத்தில் தமிழ் மக்கள் அனைவரையும் பங்குபற்றி ஹர்த்தால் அனுட்டிக்கும்படி துண்டுப் பிரசுர மூலம் கோரியுள்ளது.

---


"யோகக் கலை"

"சளைக்காது, அதிகவேலை, அதிகப்படிப்பு, அதிக சிந்தனை செய்ய உதவுகிறது."

—யோகாசனப் பயிற்சி.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி "யோகக்கலை" என்ற சிறந்த புத்தகத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை நகரெங்கும் பேரெழுச்சி!

# மூதறிஞருக்கும் காசிக்கும் வரலாறு காணாத வரவேற்பு!

## உள்ளூர் அரசியல்போக்கில் பெரும் திருப்பம்!

**தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் தந்தை செல்வா அவர்களுக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் காரைநகர் மக்கள் சென்ற 10-5-75 சனிக்கிழமை அளித்த வரலாறு காணாத மாபெரும் வரவேற்பு—கடந்ததேர்தலின் பின்னர் உள்ளூர் அரசியல் போக்கில் ஏற்பட்டுள்ள மனமாற்றத்தையும் தமிழர் கூட்டணிமீது காரைநகர் மக்கள் வைத்துள்ள அளப்பரிய அபிமானத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.**



மிகுந்த ஆர்வத்துடனும் துடிப்புடனும் காரைநகர் மக்கள் இந்த மாபெரும் வரவேற்பு விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். இவ்விழாவையொட்டி தென்னை மரங்கள், பனைமரங்கள், ஈச்சமரங்கள் தோரணங்கள் தமிழர் கூட்டணிக்கொடிகள் ஆகியவற்றைக் கொண்டு வீதியெல்லாம் அலங்கரித்து —விழாமேடையையும் எழில் குலுங்கும்படி ஆக்கியிருந்தனர் காரை நகர் வீர இளைஞர்கள்.

வட்டுக்கோட்டை பா. உ. தியாகராசாவின் கோட்டை என வர்ணிக்கப்பட்டுவந்த காரை நகர் இப்போது தமிழர் கூட்டணிக் கோட்டையாக மாறி விட்டிருப்பதை இவ்விழா எடுத்துக் காட்டியது. கூட்டம் காரைநகர்—சக்கலாவோடை எனும் இடத்தில் நடைபெற்றது. (இதே இடத்தில் சென்ற பொதுத்தேர்தலின் போது தமிழரசுக்கட்சி கூட்டம் போட முடியாமல் இருந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.)

வலந்தலைச் சந்தியிலிருந்து உணர்ச்சிக் காசி ஆனந்தன், தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோர் மேளதாளங்களுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட போது வழிநெடுகிலும் வீட்டுக்கு வீடு மக்கள் மாலைகள் சூட்டி தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். ஆர்வமிக்க இளைஞர்கள் இவர்கள் மூவரையும் தோளில் சுமந்தபடி எழுச்சிக் கோஷங்கள் எழுப்பியபடி அழைத்து வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

வீறுமிக்க இளைஞர்கள் பலர் நெஞ்சைக் கிழித்து காசிக்கும் தளபதி அமிர்தலிங்கத்துக்கும் இரத்தத் திலகமிட்டனர். ஏறத்தாழ 10,000 மக்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்துக்கு காரைநகர் வடக்கு முன்னாள் கிராம சபைத் தலைவர் திரு. க. செ. வேலுப்பிள்ளை தலைமை வகித்தார்.

காரைநகர் மக்கள் தந்தை செல்வா மீதும் தமிழர் கூட்டணி மீதும் வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துவிளக்கிய தலைவர், தியாகராசாவினால் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தை மீண்டும் பிடித்துவிட்டோம் என்று கூறியபோது மக்கள் கைதட்டி ஆரவாரம்செய்து வரவேற்றனர்.

கூட்டத்தில் பேசிய கிளிநொச்சி பா. உ. திரு. ஆனந்தசங்கரியும், காவலூரார் பா. உ. பண்டிதர் இரத்தினமும், திரு. தியாகராசாவின் கபடத்தனமான நேர்மையற்ற அரசியலை மக்கள்முன் புட்டு வைத்தபோது மக்கள் கரகோஷம் செய்து அவற்றை வரவேற்றனர்.

காரைநகர் மக்கள் சார்பில் கவிஞர் காசி ஆனந்தனுக்கு ரூபா 925-00 அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதை தமிழரசுக் கட்சியின் பழம்பெரும் ஆதரவாளரான திரு. கணபதிப்பிள்ளை வழங்கினார். இதைவிட மேலும் மூவர் ரூபா 50-00 அன்பளிப்பு வழங்கினர். திருமதி சிற்றம்பலம் மோதிரம் ஒன்றை காசிக்கு அன்பளிப்பாக வழங்கினார். இன்னும் கைத்தறி வேட்டிகளுக்கும் துண்டுகளும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் திரு. ச. சபாபதி வரவேற்புரை நிகழ்த்தினார். கூட்டத்தில் திரு. பாலசிங்கம் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், காசிஆனந்தன், திரு. தர்மராசா (எம். ஜி. ஆர்.)



திருவாளர்கள் மூதறிஞர் செல்வா, நாவலர் அ. அமிர்தலிங்கம், வ. ந. நவரத்தினம் பா. உ. முன்னாள் மூதவை உறுப்பினர் சு. நடராசா, சே. மா. செல்லத்தம்பு பா. உ. சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், ஈழவேந்தன், பீட்டர்பொன் கலன், ஐ. தி. சம்பந்தன். ஆகியோருட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

கூட்டஆரம்பத்தில் செல்வி எம். சரோஜா கந்தையாவின் சங்கீதக் கச்சேரி இடம் பெற்றது. செல்வி பாக்கிய இலட்சுமி நடராசா வயலின் வாசித்தார். காசி ஆனந்தனின் பாடல்களை செல்வி சரோஜா அழகாகப் பாடினார்.

இவ்விழாவில் கலந்துகொள்ள கிளிநொச்சியிலிருந்து ஒரு வாகனத்தில் 50க்கு மேற்பட்ட இளைஞர்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது

காரைநகரின் அண்மைக் கால வரலாறு காணாத அளவுக்கு வெற்றி விழாவாக நடைபெற்ற இந்த விழா காரைநகர் மக்களின் கடந்த கால அரசியல் சிந்தனைகளில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதைஎடுத்துக்காட்டுவதாகப் பலர் கருத்து வெளியிட்டனர்.

### வியட்நாம் விடுதலை...

—7-ம் பக்கத் தொடர்

நாட்டைப் பிரித்து தனித் தமிழ் ஈழநாட்டை அமைத்தே தீருவோம் என்றார்.

முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் பேசுகையில் தனிநாட்டுக் கோரிக்கை வரலாற்று நீதிப்படி நியாயமானது என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார்.

திரு. ஈழவேந்தன் பேசுகையில்—தமிழ்ஈழத்தைவிட குட்டிக்குட்டி நாடுகள் எல்லாம் தனிநாடுகளாக தலை நிமிர்ந்துவாழுகையில் தமிழ் ஈழம் மட்டும் ஏன் வாழமுடியாது என்று கேட்டார்.

காசி ஆனந்தன் பேசுகையில் — தமிழர்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்பதை இலக்கிய வரலாற்று ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார்.

மாதர் பேரவை செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் — சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள் அனுபவித்து வரும் சித்திரவதைகளை எடுத்துரைத்தார்.

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் பேசுகையில்—ஈழத்தமிழனின் விடுதலைக்குரல், இங்கிலாந்து அமெரிக்கா, இந்தியா, கனடா எங்கணும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது என்றும் வியட்னாமிய இளைஞர்களின் தியாகத்தையும் உறுதியான இலட்சியவீரத்தையும் நமது இளைஞர்கள் பின்பற்றி விடுதலைப் பயணத்தில் முன்னேறவேண்டும்!" என்றார்.

கூட்டத்தில் கல்முனை இளைஞர் பேரவையைச் சேர்ந்த பன்னீர்செல்வமும் உணர்ச்சி மிகு உரையொன்றை நிகழ்த்தினார்.

# வீரத் தமிழன் விசுவப்பா மீது சிங்கள வெறியர் தாக்கு!

## திருகோணமலையில் அட்டகாசம்!

அன்புள்ள கோவை அண்ணா!

தங்கள் சுதந்திரன் பத்திரிகை மூலம், தமிழ் மக்களிடையே சுதந்திரக்கனலை மூட்டி வரும் உங்கள் சேவை மகத்தானது! சென்ற இதழ்களில், "திருகோணமலையைக் காப்போம், தமிழ் ஈழத்தை மீட்போம்" என்ற பொன்னான எழுத்துக்களை அரசியல் மடலில் பார்த்து ஆறுதல் அடைந்தோம்.

திட்டமிடப்பட்ட சிங்களப் புகுத்தலால், நெருக்கப்பட்டு, அல்லற்பட்டு அடிபட்டுக்கொண்டிருக்கும், இவ்வேளையில் தங்கள் எழுத்து திருக்கோணமலை மக்களுக்கு புதிய சக்தியையும், புத்துணர்வையும் கொடுக்கின்றது.

இங்கே (10ம் கட்டையில்) யாழ்ப்பாண ரோட்டில், கித்துலூற்று என்னுமிடத்தில் குடியேறிய வீரத் தமிழன் விசுவப்பா, திட்டமிடப்பட்டு, சிங்களக்காடையர்களால் பயங்கரமாகத் தாக்கப்பட்டார். இவர் திருகோணமலையில்சிறைசென்று மீண்டவர்களில் ஒருவரும், உள்ளே 3 மாதகாலமாக இருந்த காரணத்தால், தன் கடையையே நட்டம் காரணமாக மூடிவிட்டு; கித்துலூற்றில் குடும்பத்துடனும் சுற்றத்தவருடனும் விவசாயம் செய்துவந்தார். இப்பகுதியை ஏற்கனவே தமிழர் தங்களுக்காகத் தெரிந்தெடுத்து, தமிழரசுக் கட்சியின் துணையுடன் குடியேறப்பட்ட ஓர் இடம், இதனைப் பல வருடங்களின்முன், சிங்கள விதானை ஒருவரின் சதியால் வாடி வீடுகள் எரிக்கப்பட்டு, வாலிபர்கள் கைது செய்யப்பட்டு, பல வருடங்கள் போராடிஎடுக்கப்பட்ட இடம்!

சிங்கள மக்கள் வேண்டுமென்று தாங்களும் வந்து குடியேறினர். கடைசியில் காணிகள் அக்கிரமமாக அவர்களுக்கும் நமக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. விசுவப்பா குடும்பத்தினர் அன்று கோவிலுக்குப் போய்வந்த போது பெண்களைக் கேலி பண்ணினார்கள் காடையர்கள். அதனால் ஏற்பட்ட கைகலப்பில், யாரும் பார்க்காத ஓர் வேளையில் விசுவப்பா என்பரை 25க்கு மேற்பட்ட சிங்களக்காடையர்கள் தனிப்பட்ட இடத்தில் இழுத்துச்சென்று நின்டூரமாகத் தாக்கினார்கள்.

'பறத்தமிழா! இது எங்கள் பூமி எங்கள் ஆட்சி முதலில் உன்னை நொருக்கிவிட்டோம் தொலைந்துபோ! இன்னும் பலர் இருக்கிறார்கள் அவர்களையும் கவனித்துக்கொள்வோம்' என்று சொல்லிச் சொல்லித் தாக்கினார்கள். 25 பேரும் அவர் உடலில் ஏறி மிதித்தார்கள். கடைசியில் கோடரியால் தலையில் வெட்டினார்கள்.

பயங்கரமாகத் தாக்கப்பட்ட நிலையில் விட்டுவிட்டு ஓடிச்சென்றார்கள். இப்பொழுது விசுவப்பா என்பவர் மருத்துவமனையில் இருக்கிறார்.

இப்படியாக எப்பகுதியிலும் அவர்கள் அட்டகாசம்! அங்குல அங்குலமாகவல்ல, பல ஏக்கர் கணக்கில் திட்டமிட்டு, எங்கள் தமிழ்ப்பூமி பறிக்கப்பட்டு, தமிழன் நாயிலும் கேவலமாக நசுக்கப்பட்டு வருகிறான்! இந்நிலை நீடித்தால் எங்கள் நிலை என்னவது? குடியேறிய தமிழன் அவ்விடத்தில் நீண்டகாலம் குடியிருக்கமுடியுமா? தலைவர்கள் இதில் தலையிட்டு உடனடியாக ஆவனசெய்வார்களா? அல்லது இராவண மன்னன் காலத்துக்கு முற்பட்ட தமிழ்ப்பரம்பரை திருகோணமலையில் அழிந்தொழிந்து போகவேண்டுமா? நேரில் வாருங்கள் எங்கள் பல குறைகள் தீருங்கள்.

"எங்கள் பகைவர்கள் எங்கோ மறைந்தார்கள் இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே" என்பது போல் இங்குள்ள தமிழர்களும் ஒற்றுமையாக வாழ்வோம்! அல்லது தமிழ் ஈழம் எப்படி உருவாகும்? திருக்கோணமலையை எப்படிக்காப்பது?

திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுவை நிறைந்த சுற்றுலா - 6.

மணி மணியான தமிழில், தனக்கேயுரிய இனிமையான குரலில் வண்டு ரீங்காரம் செய்வது போலப் பேசி தமிழ் மாநாட்டின் தொடக்க நாளன்றே அனைவரது உள்ளங்களையும் கவர்ந்துவிட்டிருந்தவர் செல்வி பெரண்டா பெக். கனடா நாட்டுப் பல்கலைக் கழகப் பேராசிரியையான செல்வி பெக் தமிழ்ப்பெண்ணைப்போல சேலையுடுத்து, பொட்டு வைத்து பூச்சூடி மாநாட்டில் கலந்து கொண்டபோது அவரை அசல் தமிழ்பெண் என்றே பலரும் நினைத்தார்கள். அவரது நிறம் ஒன்றுதான் அவரைக் காட்டிக்கொடுத்தது!

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வரவேற்பில் பங்குகொள்வதற்காக சென்றுகொண்டிருந்தபோது பெரண்டா பெக்குடன் பேச்சுக்கொடுத்தேன்.

"செல்வி பெரண்டாபெக் அவர்களே! உங்களைச் சில கேள்விகள் கேட்கலாமா?"

"கேளுங்கள் தமிழில் தாராளமாக — என் பெயர் பிருந்தா" என்ருர்.

ஆம், அவர் தமிழில் பிருந்தா என்றே கையெழுத்திடுபவர்!

"தமிழ்மொழியை கற்றுக்கொள்ளவேண்டுமென்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?"

"14வயதில் எனது தாய் தந்தையுடன் தென்னிந்தியா வந்திருந்தபோது கோவை மாவட்டத்தில் வாழ்ந்தேன்; அப்போது அங்குதான் தமிழ் படிக்கத் தொடங்கினேன்! கொங்கு நாட்டுச் சமுதாயம் பற்றி ஆராய்ச்சிக்கட்டுரையொன்றும் எழுதியிருக்கிறேன்!

"கனடாவில் வேறு மாணவர்களுக்கு தமிழ் சொல்லிக் கொடுக்க நீங்கள் முயற்சிக்கவில்லையா?"

'தமிழ்சொல்லிக்கொடுக்க ஆசை அதற்கு ஏற்பாடு செய்வேன். இருமாணவர்களுக்கு தமிழ்சொல்லிக் கொடுத்திருக்கிறேன்.'

"தமிழ்மொழியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"அருமையான பாஷை, ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய பாஷை!"

இவ்வாறு செல்வி பிருந்தா கூறி முடிவதற்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வந்தடைவதற்கும் சரியாக இருந்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் வட்டுக்கோட்டைத்தொகுதி மக்கள் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் வெளிநாட்டுப் பேராளர்களுக்கு பெரும்வரவேற்பொன்றையும், விருந்துபசாரத்தையும் அளித்திட ஏற்பாடுசெய்திருந்தனர்.

கல்லூரி வாசலில் தமிழினக் காவலர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் வெளிநாட்டுப் பேராளர்களுக்கும் அவர்களுடன் வந்திருந்த தமிழ் முனிவர் தனிநாயக அடிகளார், பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோருக்கும் மாலைசூட்டி வரவேற்று கெட்டிமேளத்துடன் அழைத்துச்சென்ற காட்சி கண்கொள்ளாக்

கோவை மகேசன்

காட்சியாக அமைந்திருந்தது.

திரு. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், தனிநாயக அடிகளார் ஆகியோர் உரையாற்றினர்.

நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் தமது பேச்சில் — தமிழர்கள் ஈழத்தின் ஆதிக்குடிகள் என்பதையும் அவர்கள் இடைக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் அல்லர் என்பதையும் அழுத்தமாக எடுத்துரைத்தார்.

சுவீடன்நாட்டு அறிஞர் பிறைகோம் தமது பேச்சில் முத்தான குறள்களையும் தமிழ்ப் பழமொழிகளையும் சரளமாகக் கையாண்டார்.

"யானை வரும் பின்னே
மணியோசை வரும் முன்னே!

எப்பொருள் யார் யரர் வாய்க்
கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள்
காண்பது அறிவு!

"அன்புக்கும் உண்டோ
அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன் கண்ணீர் பூசல் தரும்!"

என்ற குறள்களை அவர் சாதாரணமாக அள்ளிவீசிப் பேசியபோது, குறள் குவலயமெல்லாம் பரவி அறிஞர்களின் நாவில் நடமாடும் பாங்கு எண்ணி இறும்பூதெய்தினேன்!

தில்லிப் பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன். திரு. அமிர்தலிங்கம் அவர்களை "எனது அருமை நண்பர் நாவலர் அவர்களே" என்று விளித்து தமதுரையைத் தொடங்கிய போது—அமிர்தலிங்கத்தை நாவலர் என்று அழைக்கலாமா என்று இருட்டில் இருந்து இன்னமும் ஆராயும் குருட்டு மனிதர்கள் சிலரின் நினைவே எனக்கு வந்தது!

"தமிழ்ஆராய்ச்சி மாநாடுகள் தமிழை ஆராய்வதற்கு மட்டுமல்ல—தமிழ் மக்களை எழுப்பிவிடவும் உதவுகிறது; உதவவேண்டும்! தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு!" என்ருர் கவிஞர். அதைத்தான் இந்தஆராய்ச்சி மாநாடுகளின்மூலம்கண்டுபிடிக்கப் போகிறேம். இங்கு பேசிய நாவலர் அமிர்தலிங்கம் தமிழகத்துக்கும் தமிழ் ஈழத்துக்கும் இடையேயுள்ள உறவைப் பிரிக்க திட்டமிடப்படுவதாகக் கூறிவருத்தப்பட்டார். அந்த திட்டம் முறியடிக்கப்படும் என்பதற்கு, அத்தகைய சதிகளையெல்லாம் முறித்தெறிந்து இங்கு நாங்கள் வந்ததுதக்க எடுத்துக்காட்டாகும். ஈழத் தமிழர்கள் மேற்கொண்டுள்ள இலட்சியப்போரின் இறுதி வெற்றிக்கு இதுமுதல் வெற்றியாக அமையட்டும்!"

இந்தச் சாரப்பட சாலை இளந்திரையன் அவர்கள் வீர முழக்கமிட்டபின்னர், வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் அளித்த மதிய விருந்தை வெளிநாட்டுப் பேராளர்கள் சுவைத்து அனுபவித்தனர்.

இப்போது வட்டுக்கோட்டையை விட்டுப் புறப்படுகிறேம்! எங்கள்வண்டி தமிழ் முனிவர் தனிநாயக அடிகளாரின் இருப்பிடமான 'பிஷப்' ஹவுசை சென்றடைகிறது.

அங்கு சென்றபோதுதான் தனிநாயக அடிகளார் மாபெரும் அறிஞராகவும் ஆன்றவிந்தடங்கிய சான்ருேராகவும் உயர்ந்தோங்கி நிற்பதன் இரகசியம் எனக்குப் புரிந்தது.

—வளரும்.

# தமிழர் நிலம் மீட்க வாரீர்!

—ஆரையம்பதி ஆ. தங்கராசா

நிலம் பறிபோனுல் தமிழா உன் உயிர் பறிபோகுமடா!
நீர்வளமுள்ள ஈழத் தமிழக மண்ணில் நாளும்
கலமேறி வந்த கள்ள விஜயனின் பரம்பரைகள்
குடியேறிப் பறிக்கின்ருர்கள்! சூறையாடவும்
துணிகின்ருர்கள்!
சிலைபோல வாழ்ந்ததுபோதும் சீறியே எழு தமிழா!
சரித்திரத் தமிழர் மண்ணை சங்கிலியன்ஆண்டமண்ணை
இழக்கலாமா?
மலைநதி மாவலியாள் மாண்புடன் ஓடுகிருள்!
மங்காத தமிழர் மண்ணில் சிங்களக் குடியேற்றம்
ஒழிக்கவாரீர்!

சுவரில்லா இடந்தனிலே ஓவியம் தீட்டலாமா?
சிந்தனை அற்றநெஞ்சில் காவியம் பிறந்திடுமா?
உவர்நிலக்காணியிலே சென்நெல் சிரித்திடவிளைந்திடுமா?
உப்பில்லாப்பண்டந்தன்னில் சுவைவந்து சேர்ந்திடுமா?
நாவில்லா ஊமையினுல் என்ன சங்கதிகள் செய்திடலாம்?
நாடில்லா இனமானுல் நாயினிலும் இழிந்தோராவோம்?
சாவினிலும் நன்மையில்லை சொந்த நிலத்தையே
பறிகொடுத்தால்!
சிந்தனைத் தமிழரே நிலம் போனுல் எல்லாம்போகும்!

இருண்ட கண்டமாம் 'ஆபிரிக்கர்' மண்ணெல்லாம்
அரும்புதடா புது உலகம்! ஈழமாம் இங்கு மட்டும்
சுரண்டவே செய்கின்ருர்! தமிழர் மண்ணையே
பிடிக்கின்ருர்!
சரித்திர காலந்தொட்டு தமிழர்கள் வாழ்ந்துவந்த
செந்தமிழ்ப் பூமியெல்லாம்
இருந்த இடம் தெரியவில்லை! சிறிமாவின் புரமென்றும்
அவர் புருஷன் பண்டாரநாயக்க புரமென்றும்
பேர்சூட்டி சிங்களத்தை விதைக்கின்ருர்! பேசாலைத்
தமிழாம் மண்ணில்
பெற்ருேரைத் தோண்டும் சாக்கில் அனுராவுக்கும்
புரங்கண்டார்!

பட்டிப்பளை இருந்த மண்ணில் சிங்களக் கல்லோயா
தோன்றலாச்சு!
பாடும்மீன் நாட்டில்கூட 'ஜயந்திபுர' தொங்குதம்மா!
ஆட்டுக்கும் மாட்டுக்கும் பட்டியுண்டு! காணியுண்டு!
ஈழத் தமிழனுக்கோ நாடில்லை! வாழ்ந்துமாளவும்
நிலமுமில்லை!
பட்டதுபோதும் தம்பி! பைந்தமிழ் மண்ணைக் காக்க
புறப்படு! புறப்படடா! போராட்டக் களத்தைநோக்கி!!
கட்டுண்டோம் அடிமையானுேம் விலங்குகள்
மாட்டப்பட்டோம்!
கனித்தமிழ் மண்ணைக்காக்க புலிபோல பாய்ந்து வாடா!

வெள்ளிப்பணத்துக்கு யேசுவைக் காட்டித்தந்த யூத
இனத்துக்கும்
வாழ்ந்திட "இஸ்ரவேல்" நாடொன்று முளைக்கக்
கண்டோம்!
கொள்ளையர் கொலைஞரென்று வெள்ளையர் துரத்திவிட்ட
குறுகிய மனிதருக்கும் 'அவுஸ்ரேலியா' மலரக்
கண்டோம்!
தள்ளாத வயதினிலே தந்தை செல்வா புறப்பட்டார்!
தமிழர் மண்ணைக் காத்திடவே தானைப்படையைத்
திரட்டுகிருர்!
அள்ளக் குறையாத அற்புதத் தமிழைப் பேசும்
எல்லாளத் தமிழ்க்குலமே சொந்தமண்ணையே
மீட்கவாரீர்!

நீர்கொழும்புத் தமிழனின்று சிங்கள இனமாக
மாறிவிட்டான்!
நீர்வள நாடிழந்தான்! பெர்ஞண்டோ
பெரேராவானுன்!
பார்போற்றும் தலமாம் எங்கள் கோணேசர் வாழும்
மண்ணில்
பாவிகள் வந்துசேர்ந்தார்! மூதூரும் பறிபோகுதம்மா!
ஊரெல்லாம் இழக்கின்ருேம்! சொந்த நிலமெல்லாம்
கொடுக்கின்ருேம்!
உரிமைகள் பறிப்பதென்ருல் 'ஹிட்லர் நிலத்தையே
பறித்தது போல்
எருமைகள் சேருகின்ருர்! எம் தமிழ் மண்ணையே
நாடுகின்ருர்!
ஐயையோ தமிழா உன் தன் நிலத்தையே குறியாய்க்
கொள்வாய்!

இனவெறி பொங்கிவந்து இலங்கையில் குருதி பாய்ச்சி
இடருகள் செய்தகாலை தென்னிலங்கை வாழ் தமிழன்
ஊனிழந்தான்! இரத்தத்தால் அபிஷேகம் செய்யப்
பட்டான்!
உதைபட்டான்! கண்ணிழந்தான்! சிவனுக்குப்
பூசை செய்த
பாணந்துறை ஐயர் கூட நெருப்புக்குத் தீனியானுர்!
பாவையரும கற்பிழந்தார்! பிஞ்சுக்குழந்தைகளோ
கொல்லப்பட்டார்!
தென்னிலங்கை மூட்டிவிட்ட தீயடாதி கப்பலிலே
ஏற்றிவிட
தமிழன் தப்பியே ஓடிவந்தான் தமிழர் நிலமொன்று
இருந்ததனுல்!

வடகிழக்கு நிலமொன்று வளர்தமிழுக் கில்லை என்ருல்
வாழ்விழந்த தமிழனுக்கு வங்காளவிரிகுடாதான்
தஞ்சமாகும்!
படகோட்டிக் கடலைத்தாண்டி ரோமாபுரியிலே முத்துக்
கொண்டு
புகழ்சேர்த்தான்! அந்நாட்டு அழகிகளின் காதல்
கழுத்துக்கு அழகுசெய்தான்!
பாட்டாலே தமிழ் வளர்த்து பாங்கான வாழ்வு தந்த
பைந்தமிழா! பொன்னுன உன் நிலத்தை சிங்களத்தார்
கட்டவே பார்க்கின்ருர்! உன்இனத்தை அழிக்கவே
நினைக்கின்ருர்!
தயங்காதே! தூங்காதே! உன் நிலத்தைக் காக்கவே
புறப்படடா!

# 'வியட்நாம் விடுதலைப்போரின் வெற்றியின் அடிப்படை மொழியுணர்ச்சியே!"

—அக்கரைப்பற்றில் அமிர்தலிங்கம் முழக்கம்

"முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் வியட்நாமிய விடுதலைத் தலைவன் ஹோசிமின் வியட்நாமிய குழந்தைகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தான். அந்த வேண்டுகோளில் "வியட்னுமிய குழந்தைகளே! உங்கள் மொழியை உயிருக்கு உயிராக நேசியுங்கள்; மொழியின் அடிப்படையில் இனத்தை உருவாக்குங்கள்" என்று அவன் எழுதினுன். ஹோசிமின் வியட்நாமிய குழந்தைகளுக்கு போதித்த அந்த பலமான மொழியுணர்ச்சியின் அடிப்படையிலேயே வியட்நாம் இளைஞர் ஊறி வளர்ந்து இன்றைக்கு முப்பதாண்டுகளுக்கு பின்னர் வியட்னுமை விடுவித்திருக்கிருர்கள்; விடுதலைப்போரில் வெற்றியடைந்திருக்கிருர்கள். ஹோசிமின் காட்டிச்சென்ற அந்த வழியிலேயே மொழி அடிப்படையில் தமிழ் மக்களை ஒன்று திரட்டி நாமும் விடுதலைப் போராட்டத்தை நடத்திவருகிறேம்!"

—இவ்வாறு அக்கரைப்பற்று சித்திவிநாயகர் கோவிலடியில் த. மயில்வாகனம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் கெ. இராசதுரை பா. உ. பேசுகையில்-

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் மடல் . . .

(3-ம் பக்கத் தொடர்)

● அரசாங்க அலுவலகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், திரைப்பட மாளிகைகள் எதற்கும் அன்று, செல்லாமல் உங்கள் வீடுகளில் இருங்கள்!

● அரசாங்க வாகனங்களில் பயணம் செய்யாதிர்கள்! வீதிகளில் நடமாடாதீர்கள்!

மே 21ம் நாள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலையடங்கிலும்—தமிழ் ஈழம் முழுவதும் முன்னெப்போதுமில்லாத அளவு உக்கிரமான—பலம் வாய்ந்த ஹர்த்தால் நடைபெறட்டும்! நம் உறுதியின் வலிமையை உலகம் உணரட்டும்!

மே 22ம் நாள் நடைபெறவிருக்கும் சட்டமறுப்பு ஊர்வலம்—தினவெடுத்த தீந்தமிழ் வீரர்களுக்கு தித்திக்கும் சர்க்கரைப் பொங்கல்! அரசின் அடக்குமுறையை எதிர்த்து போராடிட எமக்கு வாய்ப்பு எங்கே? என்று கேட்டு குமுறிக்கிடந்த தமிழ் இளைஞர்களுக்கு அருமையான வாய்ப்பு மே 22ம் நாள் அவசரகாலச் சட்ட மறுப்பு!

நண்பா, வா! தீந்தமிழ்க் காளையே வா! திட்டம் எங்கே அரசின் கொட்டம் அடக்கிட என்று கேட்டு கொதித்திருந்த வரிப்புலியே வெளியே வா! முறமெடுத்துப் புலியடித்த தாய்க்குலமே விரைந்துவா! தாயக விடுதலைப் போரில் குண்டாந்தடியடியை—கோலேந்திகளின் சித்திரவதையை—சிறைச்சாலைகளை சந்தித்திட தயாராக இருக்கும் கண்மணியே வா! உயிர் வெல்லமல்ல—உரிமையே பெரிது என முழக்கமிடும் வீரனே வா! தாயக விடுதலைக்காக இரத்தம் சிந்திட—மண்டையுடைபட — எலும்புகளை முறித்துக் கொடுத்திட — தசைகளை அறுத்துக் கொடுத்திட — கண்ணீர்ப் புகையில் குளித்திட—காராக்கிருகத்தை சந்தித்திட தயாராக இருக்கும் என்னருமைத் தம்பியே வா! மே 22ம் நாள் பிற்பகல் 2 மணிக்கு முன்னர் தமிழர் கூட்டணியின் யாழ்ப்பாணத் தலைமைச் செயலகத்துக்கு எதற்கும் தயாரான நெஞ்சுடன்,—எதையும் தாங்கும் இதயத்துடன்—அணியணியாக வந்து சேர்!

திட்டமிட்டபடி சட்டமறுப்பு ஊர்வலத்தை நடத்தியே தீருவோம்! அவசரகாலச் சட்ட விதியை முறித்தே தீருவோம்! விளைவுகளைப் பற்றி நாம் கவலைப்படவில்லை! நாங்கள் எங்களைப் பற்றி என்றைக்குமே கவலைப்படாதவர்கள்! எங்கள் வாழ்வை இயக்கத்துக்கும் இனத்துக்கும் முற்று முழுதாக ஒப்புக்கொடுத்துவிட்டவர்கள்! எந்த நேரத்திலும் எதற்கும் தயாராக இருப்பவர்கள்!

குண்டாந்தடிக்கு பயந்தவர்களல்லர் நாம்! குண்டாந்தடியே எங்கள் இரும்பு மனிதர் நாகநாதனின் தலையில் பட்டு இரண்டாக முறிந்த வரலாறு எங்களுக்குத் தெரியும்! அந்த உறுதி மிக்க இரும்பு மனிதரின் கைக்குள் வளர்ந்தவர்கள் நாம்! அச்சம் என்பது என்னவென்றே தெரியாமல் வளர்க்கப்பட்டவர்கள் நாம்!


மே 22ம் நாள்—தமிழ் ஈழத் தாயகத்தின் தலைநகரானயாழ் நகரின் வீதிகளில் நாம் நடத்தவிருக்கும் கட்டுப்பாடான சட்ட மறுப்பு ஊர்வலத்தின் போது — பொலிசாரின் குண்டாந்தடிகள் நம் மண்டையைப் பதம் பார்த்து அதன் காரணமாக யாழ் நகர வீதிகளிலே இரத்த ஆறு ஓடுமானால்—எங்கள் சிலருடைய குருதி கொட்டப்படுமானால்—உயிர் குடிக்கப்படுமானால்—அதிலிருந்து வெடித்துக் கிளம்பப் போகும் விடுதலைப் புரட்சியை—மக்கள் எழுச்சியை இந்த அரசாங்கத்தினால் ஒருபோதுமே அடக்கிவிட முடியாது!

எனவே மே 22ம் நாள்—விடுதலை வரலாற்றில் புதிய சரிதையை எழுதிட தியாகத்தில் குளித்திட—கூட்டணிப் பணிமனை நோக்கி வீறுநடைபோட்டு விரைந்து வா என் தோழனே!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்


கெயிட்டி 4-வது வாரம்



சிவகுமார், விஜயகுமார், கே. ஏ. தங்கவேலு, வீரராகவன், ஜெயசித்திரா, விதுபாலா, மனோரமா ஆகியோர் நடித்த

பொண்ணுக்கு தங்க மனசு

டைரக்ஷன்: தேவராஜ்—மோகன்.

5-வது ஜனந்திரன் வாரம் செல்லமகால்

நடிகர்கள்:

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

நாகேஷ் - அசோகன் - சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன் - எஸ் வி. ராமதாஸ், வி. கோபால கிருஷ்ணன் - ஜெஸ்டின்-சாண்டோ, எம்.எம்.ஏ. சின்னப்பா தேவர்.

நடிகைகள்:

கே. ஆர். விஜயா,

குமாரி சச்சு - ராதிகா - கோவை காமாட்சி இந்திரா மற்றும் தேவர் பிலிம்ஸ் குழுவினர்.

டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்

தேவர் பிலிம்ஸ்

நல்ல நேரம்


(ஈஸ்ட்மென் கலர்)



6-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி — பிளாஸா — வெலிங்டன் யாழ் நகர்

வீட்டுக்காக மட்டும் வாழாமல், நாட்டுக்காகவும் வாழ்ந்த, ஒரு நாடக நடிகரின் வரலாறுதான்



நடிகர் திலகம் சிவாஜி கணேசன், உஷா நந்தினி ஸ்ரீகாந்த், ஜெயா, நம்பியார். வி. கே. ராமசாமி, மனோரமா, சசிகுமார், டி.கே. பகவதி, குமாரி பத்மினி

—நடித்த—

சித்ரமாலா கம்பைன்ஸ் அளிக்கும் குகநாதனின்

ராஜபார்ட் ரங்கதுரை

(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் [illegible] கொழும்பு பண்டாரநாயகா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1975ம் வருடம் மே மாதம் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.